LIBRARY
26 SEP 1960
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 20th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—OBITUARY REFERENCE TO SRI P. M. VELAYUTHAPANI, EX M.L.A.

MR. SPEAKER : இந்தச் சட்டசபையின் பழைய அங்கத்தினரான திரு. டி. எம். வேலாயுதபாணி அவர்கள் இம்மாதம் 17-ம் தேதியன்று மறைந்துபோன செய்தியை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. வேலாயுதபாணி அவர்கள் இந்தச் சட்ட சபையிலிருந்து நல்ல பணி யாற்றியிருக்கிறார்கள். அவர்கள் டெல்லியில் Constituent Assembly-ல் அங்கத்தினராக நல்ல வேலை செய்திருக்கிறார்கள். சென்னை நகர சபை யிலும் 12 வருடங்கள் இருந்து நல்ல பணியாற்றியிருக்கிறார்கள். என் னோடும் நகரசபையில் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள். பல ஹரிஜன கமிட்டிகளிலும், மதுவிலக்கு கமிட்டிகளிலும், அங்கத்தினராக இருந்து பலவிதமான சமுதாய வேலைகள் செய்திருக்கி றார்கள். ஆகவே கனம் அங்கத்தினர்கள் அனைவரும் அவர்களுடைய மறைவுக்கு வருத்தம் தெரிவிக்கும் முறையில் ஒரு நிமிட நேரம் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் எழுந்து நின்றனர்.

II.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Reserve forests in Pudukkottai

*744 *Q.*—SRI V. ARUNACHALA THEVAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the work relating to the notification of all the reserve forests in Pudukkottai Division has been completed and whether the entire reserve forests area has been separately delimited and demarcated; and

(*b*) whether it is a fact that a large scale illicit tree cutting is going on without any check?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Sir, out of the total area of about 58,786 acres of forests in Pudukottai Range, survey and demarcation work has been completed over an extent of 32,286 acres, and the work is in progress over an extent of 16,594 acres. The remaining area of 9,906 acres will be taken up, soon after the work in hand is completed.

(*b*) If the question is about trees in the Reserved Forests, the answer is in the negative.

SRI V. ARUNACHALA THEVAR : புதுக்கோட்டையில் நார்த்தா மலை காடுகளிலிருந்து சுமார் 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மரங்களை திருட்டுத்தனமாக வெட்டிப் போனதின் காரணமாக, ரெவின்யூ இலாகாவும், பாரஸ்ட் இலாகாவும் தங்களுக்கு இதன் பேரில் சம்பந்தமில்லை என்று

[20th April 1960

சொன்னதின் காரணமாக இப்போது கலெக்டர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா, இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் எனக்குத் தெரிகின்ற அளவுக்கு தகவல்கள் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆனால் இதில் குறிப்பிட்டிருக்கின்ற காடு ரிசர்வ் பாரஸ்டில் இல்லை. இதனால் பாரஸ்ட் இலாகாவுக்கு இதில் எந்த விதமான பொறுப்புமில்லை. இருந்தாலும் கலெக்டர் அவர்கள் இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக ரெவின்யூ இலாகாவோடு கலந்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

SRI T. T. DANIEL: May I know, Sir, what the nature of the boundry is which this Government are erecting usually to demarcate the boundary of the reserved forests from the adajacent private holdings ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Just as it happens in other cases, stones are erected and boundary is marked.

SRI R. SRINIVASA IYER : இந்தப் புதுக்கோட்டையில் சுமார் 1,500 குடும்பங்கள் விறகு வெட்டுவதை நிறுத்தமாட்டோம் என்று சொல்லுவதாக தெரிகிறது. இவ்விதம் காடுகளிலிருந்து விறகு வெட்டுவதை தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எனக்குத் தெரிந்த வரையில் விறகுக்காக மரங்களை வெட்டுவதில்லை. உலர்ந்த மரங்களைத்தான் விறகுக்காக எடுத்துக்கொண்டு போகிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவிலும் செங்கோட்டை பகுதிகளிலும்தான் மரங்களை வெட்டி விறகுக்கு உபயோகிப்பதாக தெரிகிறது. இவைகளை எல்லாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. ARUNACHALA THEVAR : எவ்வளவு பேர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

SRI K. B. S. MANI : தனிப்பட்டவர்கள் காடுகளிலிருந்தும் ரிசர்வ் பாரஸ்டு அல்லாத காடுகளிலிருந்தும் தனிப்பட்டவர்கள் மரங்களை வெட்டுவதை தடுக்க சட்டம் ஏதாவது இருக்கிறதா, அப்படியானால் இதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட காடுகள் அதிகமாக ஒன்றுமில்லை.

SRI A. VEDARATHNAM : இந்த மரம் வெட்டுவது என்பது புதுக்கோட்டை காடுகளில் மட்டும் அல்ல. காடுகள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கு எல்லாம் இவ்விதமாக திருட்டுத்தனமாக விறகு வெட்டிக்கொண்டுப் போவது நடந்து கொண்டிருக்கிறது இவைகளை நன்றாக கண்காணித்து தடுக்க அரசாங்கம் முன் வருமா ? அதற்கான ஏற்பாடு இப்போது என்ன செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விறகு பற்றாக்குறை இருப்பதின் காரணமாக எவ்வளவு கண்காணிப்பு இருந்தாலும் விறகு வெட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதை தவிர்ப்பதற்கு எந்த வகையில் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமோ அந்த வகையில் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.